# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL SESSIONS JUDGE, CHENNAI.

**Case No. : S.C.No. 361/2024** **Date : 27.05.2025**

Deposition of Witness for Prosecution PW

Name : திரு.ஸ்ரீதர்

Father's Name :

Village :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 27th day of May 2025.

-----------------------------------------------------------------------------------------

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை, மயிலாப்பூர், நடுத்தெரு, கதவு எண் 4/62 ல் வசித்து வந்து வியாபாரம் செய்து வருகிறேன். நான் 2006 ம் வருடம் Smart Safex Services Pvt Ltd என்ற நிறுவனத்தில் மயிலாப்பூர் கிளை பொறுப்பாளராக பணியாற்றி வந்தேன். மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் தமிழ்செல்வன் என்பவர் சென்னையில் உள்ள எங்கள் அலுவலக 6 கிளைகளில் வசூலாகும் பணத்தை தினசரி அடையாறு கிளை Kotak Mahendra வங்கியில் செலுத்துவது வழக்கமான பணியாகும். அதன்படி 21.08.2006 அன்று அண்ணா நகர் கிளையில் பணம் வசூல் செய்துவிட்டு வங்கியில் deposit செய்ய போகும்போது கத்தி முனையில் பணம் கொள்ளையடிக்கப்பட்டது என தகவல் வந்தது. நான் உடனடியாக சம்பவ குறித்து புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதாகும். அந்த புகார் அ.த.சா.ஆ.1. சம்பவதினத்தன்று வசூலான பணம் ரூ.5,44,000/- கொள்ளையடிக்கப்பட்டது. பின்னர் போலீசார் நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். நான் அந்த பணத்தை நீதிமன்றத்தில் மனு

கொடுத்து பெற்றுக் கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 வது எதிரி தரப்பில் சட்ட உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் இல்லை. வழக்கறிஞர் வெளியூர் சென்றிருப்பதால் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். சாட்சி முன்னிலையாகி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகாத காரணத்தினால் கு.வி.மு.ச.பிரிவு 309 ன் கீழ் சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Date : 27.05.2025

I Additional Judge

## <u>DEPOSITION OF WITNESS</u>

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL SESSIONS JUDGE, CHENNAI.

**Case No. : S.C.No. 361/2024** **Date : 27.05.2025**

Deposition of Witness for Prosecution PW

Name : **திரு.தமிழ்செல்வன்**

Father's Name :

Village :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 27th day of May 2025.

---

**எதிரி ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் சென்னை, கதவு எண் 117, கீழக்கட்டளை, காந்தி நகர் அம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து தற்போது வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவம் நடந்த 21.08.2006 அன்று Smart Safex Services Pvt Ltd என்ற நிறுவனத்தில் சென்னை அலுவலகத்தில் காசாளராக பணிபுரிந்து வந்தேன். எங்கள் நிறுவனத்தின் 6 கிளைகளிலும் வசூலாகும் பணத்தை Kotak Mahendra வங்கியில் deposit செய்வது என்னுடைய வேலையாகும். 21.08.2006 அன்று காலை 10.00 லிருந்து 10.30 மணியளவில் அண்ணா நகர் கிளையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு சோனா டவர் அருகே நான் வந்துக் கொண்டிருந்தபோது நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் வந்தபோது இரண்டு நபர் அவர்களுடைய இருசக்கர வாகனத்தில் வந்து எனக்கு குறுக்காக அவர்களுடைய இருசக்கர வாகனத்தை நிறுத்தி என்னை கீழே தள்ளினார்கள். நான் கீழே விழுந்தவுடன் இருச்க்கர வாகனத்தின் பின்னே அமரந்திருந்தவர் கத்தியை காண்பித்து என்னிடம் இருந்த பணப்பையை

பறித்தார். நான் பணப்பையை கொடுக்காமல் என்னுடைய கையில் வைத்திருந்தேன். கத்தியை காட்டிய நபர் வேகமாக பிடுங்கியதால் பணப்பையை அறுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். உடனடியாக என்னுடைய அலுவலக மேலாளர் ஸ்ரீதர் அவர்களுக்கு தகவல் கொடுத்தேன். அவர் திருமங்கலம் காவல் நிலையம் வந்து சம்பவம் பற்றி புகார் கொடுத்தார். பின்னர் அன்றைய தினமே போலீசார் அலுவலகத்தில் வைத்து எதிரி என்னிடம் பிடுங்கி சென்ற பையை போலீசார் காண்பித்தனர். பின்னர் நீதிமன்றம் மூலமாக பணத்தை பெற்றுக் கொண்டனர். அந்த பணத்தை வங்கியில் வைப்பீடு செய்து சலானை அ.சா.1 டம் கொடுத்துவிட்டேன். என்னிடம் பணத்தை கொள்ளையடித்த இரண்டு நபர்களில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் ஒல்லியாக இருந்தார். வெள்ளை சட்டை அணிந்திருந்தார். என்னிடமிருந்து கொள்ளையடித்த நபர்கள் நீதிமன்றத்தில் உள்ளனரா என்றால் சம்பவம் நடந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை. பணம் பறிபோன பதற்றத்தில் நான் இருந்ததால் நான் புகார் கொடுக்கவில்லை. அ.சா.1 புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 வது எதிரி தரப்பில் சட்ட உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் இல்லை. வழக்கறிஞர் வெளியூர் சென்றிருப்பதால் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். சாட்சி முன்னிலையாகி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகாத காரணத்தினால் கு.வி.மு.ச.பிரிவு 309 ன் கீழ் சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Date : 27.05.2025 I Additional Judge